People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**11.03.2010**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

மாண்புமிகு முதல்வர், அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## 01-3-2010 முதல் 6-3-2010 முடிய இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | - |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 29 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 10 |
| 5. | வகுப்பறை வன்முறை | 1 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 2 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 5 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | - |
| 10. | பெண் சிசு கொலை | - |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 3 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | - |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | - |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |

| | | |
|---|---|---|
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | - |
| 17. | மணல் கொள்ளை | - |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | 1 |
| 19. | பொதுவானவை | 3 |
| | மொத்தம் | 58 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்

அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்

அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு
# 01. 03.2010 முதல் 6. 03.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 621. | 1.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** திட்டக்குடி அருகே நெய்வாசல் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள மேல்பாதி கிராமத்துக்கும் கீழ்பாதி கிராமத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் மேல்பாதி கிராமத்தில் உள்ள 7 குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் உயிருக்கு பயந்து கிராமத்தை விட்டு வெளியேற்றம். | தலித்துகள் மீதான வன்முறை | ஜெயராம் தினத்தந்தி (1–2–10) |
| 622. | 1.3.2010 | **புதுச்சேரி மாநிலம்:** தவளக்குப்பம் அருகே உள்ள தமிழகப் பகுதியான நல்லவாடு கிராமத்தைச் சேர்ந்த மணி(40) மனைவி சுலோக்சனா. தனது கணவரை சிலர் கடத்தி சென்றுவிட்டதாக கொடுத்த புகாரை காவல்துறை ஏற்க மறுத்ததாக சுலோக்சனா புகார். | காவல் நிலைய வன்முறை | ஜெயராம் தமிழ்ஓசை (5–2–10) |
| 623. | 1.3.2010 | **கடலூர் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை அருகே ஏமம் கிராமத்தைச் சேர்ந்த தேவராஜ்(37) மனைவி கல்வி(31). கணவர் தேவராஜ் கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்துவதாக கல்வி புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் தமிழ்ஓசை (5–2–10) |
| 624. | 1.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** தியாகதுருகம் அருகே வேளாந்தல் கிராமத்தைச் சேர்ந்த குமாரசெல்வம் மகன் சந்திரன்(7). அதே பகுதியைச் சேர்ந்த விஜயகுமார்(20) சிறுவனை பாலியல் தொந்தரவு செய்ததாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | ஜெயராம் தமிழ்ஓசை (5–2–10) |
| 625. | 1.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் அருகே உள்ள ராகவன்போட்டை கிராமத்தைச் சேர்ந்த கண்ணப்பன் மனைவி கிருஷ்ணம்மாள். உறவினரான பிச்சைமணியுடன் ஏற்பட்ட குடும்ப தகராறில் ஆத்திரமடைந்த பிச்சைமணி கத்தியால் குத்தியதில் கிருஷ்ணம்மாள் மரணம். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் தினத்தந்தி (6–2–10) |
| 626. | 1.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** அய்யங்கோவில்பட்டு கிராமத்தில் திருநங்கைகள் அரசு வழங்கிய வீட்டில் வசித்து வரு திருநங்கையினரை கிராமத்தில் வசிக்க கூடாது அங்குள்ளளவர்கள் விரட்டுவதாக | திருநங்கைகள் மீதான வன்முறை | ஜெயராம் தினத்தந்தி (6–2–10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருநங்கைகள் எஸ்.பி.அமல்ராஜிடம் புகார். | | |
| 627. | 1.3.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அருகே கணக்கன்குப்பம் திரவுபதிஅம்மன் கோவில் தெருவை சேர்ந்த பெருமாள் மகள் சுதா(18). எலியாஸ்(25) இருவரும் காதலித்து வந்தனர். தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி எலியாஸ் ஏமாற்றியதாக சுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் தமிழ்முரசு (6–2–10) |
| 628. | 1.3.2010 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி அருகே மாளிகைமேடு ஊராட்சியில் ஊரக வேலை வாய்ப்பு பணி நடைபெற்று வருகிறது. இதில் கூலி குறைவாக வழங்கியதாக பொதுமக்கள் சாலை மறியல். | லஞ்சம் | ஜெயராம் மாலை மலர் (9–2–10) |
| 629. | 1.3.2010 | **புதுவை மாநிலம்:** புதுவை அருகே காட்டேரிக்குப்பம், செட்டிப்பட்டு, திருக்கனூர், மண்ணாடிப்பட்டு, வாதானூர் பகுதியில் வாழும் இருளர் இன மக்களுக்கு பள்ளிக்கூடம், மற்றும் மின் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகள் இல்லை என மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜெயராம் தமிழ்ஓசை (10–2–10) |
| 630. | 1.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** மேட்டூர் சாலையைச் சேர்ந்த விஜயகோபால் மகள் பிரியங்கா(25). திருமணத்தில் விருப்பம் இல்லை என கூறியும் பெற்றோர் ரமேஷ் என்பவருக்கு கட்டாயபடுத்தி திருமணம் செய்து வைத்ததாக பிரியங்கா புகார். | பெண்கள் மீதான வன்முறை | K.பெருமாள் காலைக்கதிர் (16–2–10) |
| 631. | 1.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** அவிநாசி ரோடு செல்லம்மாள் காலனியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகன் இளவரசன்(13). பள்ளி சென்று திரும்பி இளவரசன் தீக்குறித்து தற்கொலை. | வகுப்பறை வன்முறை | K.பெருமாள் காலைக்கதிர் (17–2–10) |
| 632. | 1.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோட்டைச் சேர்ந்த ஒரு பிரபல ரவுடி சிறையில் அடைக்கப்பட்டு இருப்பவர் ஜெயிலில் இருந்துக் கொண்டே செல்போன் மூலம் ஆட்களை இயக்கி வருவதாகவும் அவனை என்கவுண்டர் மூலம் தீர்த்துகட்ட காவல்துறை திட்டமிட்டுள்ளதாக தகவல். | காவல்நிலைய வன்முறை | K.பெருமாள் காலைக்கதிர் (17–2–10) |
| 633. | 1.3.2010 | **நாகை மாவட்டம்:** கொள்ளிடம் அடுத்த தைக்கால் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த ஜாகீர்உசேன்(25) மனைவி மதினா பானு(21). கூடுதல் | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (17–2–10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணைக் கேட்டு மாமனார் மாமியார் துன்புறுத்தி தனது மகளை கென்றதாக மதினாபானு தந்தை கரீம் புகார். | | |
| 634. | 1.3.2010 | **நாகை மாவட்டம்:** நாகூர் தும்பைப்பூ தெருவைச் சேர்ந்த பாட்ஷா(28) மனைவி ராசாத்தி(24). கணவன் மனைவி தகராறில் கோவித்துக் கொண்டு தாய் வீட்டிற்கு வந்த ராசாத்தியை அழைத்து செல்ல வந்த பாட்ஷா தனது மாமியார் அமீர்பீவியை தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (17–2–10) |
| 635. | 1.3.2010 | **ஈரோடு மாவட்டம்:** ஜம்பையைச் சேர்ந்த சசிக்குமார்(34). சசிகுமாருக்கு ஆசிட்பட்டு காலில் காயம் ஏற்பட்டு ஊத்தக்குளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் சசிகுமார் உயிரிழந்ததாக உறவினர்கள் புகார். | மருத்துவர்கள் அலட்சியம் | K.பெருமாள் காலைக்கதிர் (18–2–10) |
| 636. | 1.3.2010 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரையடுத்த அனுப்பர்பாளையம் புதூர் கருப்பராயன் கோயில் வீதியைச் சேர்ந்த கவிராஜ் மனைவி மேனகா(26). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறத்துவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | K.பெருமாள் தினகரன் (18–2–10) |
| 637. | 1.3.2010 | **நாகை மாவட்டம்:** வைத்தீஸ்வரன் கோவில் போலீஸ் சரகம் காரைமேட்டை சேர்ந்த பிரசன்னவெங்கடேஷ்(37) மனைவி தீபா. கணவன் மனைவி குடும்ப தகராறில் ஆத்திரமடைந்த பிரசன்னவெங்கடேஷ் தீபாவை தடியால் தாக்கி மண்டையை உடைந்ததாக தீபா புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (18–2–10) |
| 638. | 1.3.2010 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியை அடுத்த மஞ்சம்பாளையத்தைச் சேர்ந்த பிரியா(25) மனவளர்ச்சி குன்றிய பிரியாவை அதே பகுதியைச் சேர்ந்த சின்னசாமி(60) பாலியல் பலாத்காரம் செய்ததாக கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | K.பெருமாள் தினகரன் (19–2–10) |
| 639. | 1.3.2010 | **நாகை மாவட்டம்:** தரங்கம்பாடி அடுத்த பொறையாறு இச்சன்வாடி மிஷன்தெருவைச் சேர்ந்த அன்புரோஸ், மனைவி பிச்சம்மாள்(40). குடும்பத்தகராறு காரணமாக பிச்சம்மாள் தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (19–2–10) |
| | 1.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை மத்திய | சிறைச்சாலை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிறையில் ஆறுமுகம், ராஜா விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டுள்ளனர். ஆறுமுகம், ராஜாவை தாக்கியதாக புகார். | மோதல் | |
| 640. | 1.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** கோவிலூர் அருகிலுள்ள பெரியகோட்டையைச் சேர்ந்தவர்கள் சிலர் நொச்சியோடைப்பட்டி கிராமத்தை சேர்ந்த பெண்களை கேலி செய்ததால் இருகிராமத்தினருக்கு இடையே மோதல். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 641. | 1.3.2010 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள கூத்தப்பட்டியைச் சேர்ந்த ஜெயராமன் மனைவி செல்வி(18). திருமணம் ஆகி 5 மாதங்களில் செல்வி விஷம் குடித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 642. | 2.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** குஜிலியம்பாறையில் அருகே வசித்து வந்த குப்புச்சாமி, ரஞ்சி, இருவருக்கிடையே ஏற்பட்ட தகராறில் ரஞ்சித் தாக்கியதில் குப்புசாமி இறந்ததாக புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என புகார். | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 643. | 2.3.2010 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடியில் இருந்து நெல்மூட்டைகளை ஏற்றி வந்த லாரி டிரைவர் தர்மராஜை வழிமறித்து மர்ம கும்பல் 4.50 லட்சம் ரூபாயைப் பறித்து சென்றது. இது குறித்து சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் ஏட்டு பாலன் நடவடிக்கை எடுக்கவில்லை என தர்மராஜ் புகார். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 644. | 2.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆண்டார் கொட்டாரபுரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனைவி மைதிலி. வீட்டில் மைதிலி தூக்குபோட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 645. | 2.3.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே உள்ள மேலக்காவனூர் கிராமத்தைச் சேர்ந்த அருளானந்தம்(68). ஊரில் மணல் திருட்டு போனது அதிகாரிகளுக்கு அருளானந்தம் தான் தகவல் கொடுத்தாக கூறி அவரையும் அவரது குடும்பத்தையும் ஊரை விட்டு ஒதுக்கி வைத்ததாக புகார். | சமூகப் புறக்கணிப்பு | தமிழ்சுடர் |
| 646. | 2.3.2010 | **தேனி மாவட்டம்:** பெரியகுளம் அருகே உள்ள மலைக்கிராமம் அகமலை ஊரை சேர்ந்த சந்திரன் மனைவி முத்துலெட்சுமி. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முத்துலெட்சுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தாக அதே ஊரைச் சேர்ந்த 8 பேர் மீது புகார். | | |
| 647. | 2.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவையைச் சேர்ந்த ரமேஷ்குமார் மனைவி தீப்மாலாகவுர்(30). கூடுதல் வரதட்சனைக் கேட்டு கணவர் ரமேஷ்குமார் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக தீப்மாலாகவுர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 648. | 2.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் பெரியார் நகரை சேர்ந்த பாண்டிச் செல்வம் மனைவி செல்வி(21) கணவன் மனைவி குடும்பத்தகராறு காரணமாக 7 மாத கர்ப்பிணியான செல்வி தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 649. | 2.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பொதுமக்கள் வழங்கும் புகார்கள் நகர் காவல் நிலையங்களில் ஒன்றரை மாதங்கள் வரை தேங்கிக் கிடப்பதாக புகார். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 650. | 3.3.2010 | **கடலூர் மாவட்டம்:** சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் இன்ஜினியரிங் இரண்டாம் ஆண்டு மாணவர் கவுதம்குமார்(20) இறந்ததை அடத்து நடந்த போராட்டத்தில் போலீசார் விரட்டியதால் ஆற்றில் குதித்து முகமதுசர்ப ரோஸ்ராப்(22) ஆஷிஷ் ரஞ்சன்குமார்(20). இருவரும் இறந்ததாக புகார். | மாணவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 651. | 3.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் மைனர் காலனியைச் சேர்ந்த அதி.மு.க பிரமுகர் வெள்ளைச்சாமி(35) மனைவி தீபா. கணவர் வெபள்ளைச்சாமிக்கும் கோட்டையில் பணியாற்றிய எஸ்.ஐ.ராணிக்கும் உண்டான தொடர்பினால் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக தீபா புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 652. | 3.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் பாத்திரக்கடை மற்றும் பழைய இரும்புக்கடைகளில் வேலை பார்த்த 14 வயதுக்குட்பட்ட 4 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு. | குழந்தைத் தொழிலாளர்கள் மீட்பு | தினமலர் |
| 653. | 3.3.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடியை சேர்ந்த ராமரை விசாரணைக்காக காவலர்கள் அழைத்து | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்ற கொன்றதாக அவரது மனைவி மற்றும் குடும்பத்தார் கொடுத்த புகரை வாபஸ் பெறும்மாறு காவலர்கள் மிரட்டுவதாக ஐகோர்ட்டில் மனு. | | |
| 654. | 3.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஊத்தங்குடியை சேர்ந்த முத்துக்குமார்(27) மனைவி முத்துமாாரி. முத்துக்குமாரி தங்கை சுகன்யாவை கணவரை விட்டு பிரிந்து தன்னுடன் குடும்பம் நடத்த வருமாறு முத்துக்குமார் மிரட்டியதாக சுகன்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 655. | 3.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேற்கு ஒன்றியத்தில் உள்ள சிறுவாலை கிராமம். சிறுவாலை பகுதியில் சாலை பழுது பார்க்கும் பணி தாமதமாக நடைபெற்றுவருவதால் பேருந்துகள் செல்ல முடியாத நிலை. வேலை தொடங்கி பல நாட்கள் ஆகியும் தாமதமாக செயல்படுவதால் சிறுவாலை கிராம மாணவர்கள் சுமார் 3 கிலோ மீட்டர் நடந்து செல்வதாக புகார். | அரசு அலட்சியம் மாணவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 656. | 3.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை பைபாஸ் சாலை பகுதியில் உள்ள பட்டுகோட்டை கல்யாண சுந்தரம் நகரைச் சேர்ந்த தேவசகாயம் மகள் ஹேமாவதி(19) கல்லூரி சென்று அவரை காணவில்லை என தேவசகாயம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 657. | 4.3.2010 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் முத்துமண்டபம் அருகே அண்ணாநகரைச் சேர்ந்த அப்புகுட்டி தினேஷ்குமார். இவர்களை வேலூர் வடக்கு காவல்நிலைய காவலர்கள் சட்டவிரோதமாக அடைத்து வைத்துச் சித்திரவவதை. | காவல் நிலைய வன்முறை | பாஸ்கர் |
| 658. | 4.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் சிவகாசி அருகே டீசல் இல்லாமல் நின்ற லாரி மீது முத்துப்பாண்டி(19) என்பவர் மோதி இறந்தார். விபத்தில் சிக்கிய லாரி விடுவிக்க இன்ஸ்பெக்டர் உஸ்மான் அலி ரூபாய் 4 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக லாரி டிரைவர் சக்திவேல் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 659. | 4.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** இந்திரா நகரைச் சேர்ந்த ஜெயராமன்(46) ரேசன் அரிசியை லாரியில் கடத்திய போது அதிகாரிகளால் பறிமுதல். இது | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பான ஆவணங்களை விடுவிப்பதாக கூறி ஜெயராமனிடம் வருவாய் ஆய்வாளர் நடராஜன் அலுவலக எழுத்தர் சண்முகம், லஞ்சம் வாங்கியதாக கைது. | | |
| 660. | 4.3.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** லந்தக்கோட்டை ஊராட்சி வைரம்பட்டியை சேர்ந்த சின்னாக்கவுண்டர் மகன் ராஜூ மனைவி பாப்பாத்தி. கணவன் மனைவி தகராறில் ஆத்திரம் அடைந்து ராஜூ தாக்கியதில் பாப்பாத்தி இறந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 661. | 4.3.2010 | **தேனி மாவட்டம்:** ரத்னம் மெயின் விதீயைச் சேர்ந்த ராஜாங்கம்(54) மனைவி வளர்மதி(33). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக வளர்மதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 662. | 5.3.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரையை அடுத்த பெருங்குடியில் உள்ள சரசுவதி நாராயணன் கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு உணவு சுகாதாரமற்று வழங்குவதாக மாணவர்கள் புகார். | மாணவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 663. | 5.3.2010 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே எம்.கோவில்பட்டியைச் சேர்ந்த பூச்சிபனையன் (45) மனைவி அம்மாசி(40). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கம்பு, மற்றும் கற்களால் தாக்கியதாக பூச்சிபனையன் மீது அம்மாசி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 664. | 5.3.2010 | **புதுச்சேரி மாநிலம்:** புதுவையை அடுத்த கோட்டக்குப்பம் அருகே சின்னமுதலியார் சாவடி தெருவைச் சேர்ந்த மதியழகன்(17). தனியார் பள்ளயில் +12 படித்து வருகிறார். பள்ளி சென்ற மாணவனை மர்ம கும்பல் கடத்தியதாக புகார். | மாணவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 665. | 5.3.2010 | **தேனி மாவட்டம்:** சின்னமனூர் அருகே உள்ள எரசக்கநாயக்கனூரைச் சேர்ந்த தங்கத்துரை(58) மகள் மலர்(26). அதே ஊரைச் சேர்ந்த போதுமணி(27) தனது மகள் மலரைக் கடத்தி சென்றதாக தங்கத்துரை புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 666. | 5.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள தாயில்பட்டி | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோட்டையூரைச் சேர்ந்த முத்துராமலிங்கம் மகள் மணிமேகலை(20). கல்லூரி சென்ற தனது மகளை காணவில்லை என முத்துராமலிங்கம் புகார். | | |
| 667. | 5.3.2010 | **தஞ்சை மாவட்டம்:** தஞ்சை மருத்துவக்கல்லூரி சாலை சிந்தாமணி குடியிருப்பையைச் சேர்ந்தவர் ஜான்கென்னடி(45). தஞ்சை எஸ்.பி. அலுவலகத்திற்கு குடிபோதையில் வந்த ஜான்கென்னடி தகராறு செய்ததாக கைது. | காவல் நிலைய வன்முறை | தமிழ்முரசு |
| 668. | 5.3.2010 | **சென்னை மாவட்டம்:** மாங்காடு அருகிலுள்ள குளப்பாக்கம் அன்னை சத்யா நகரைச் சேர்ந்த ராஜமாணிக்கம்(30) தனது 10 மாத பெண் குழந்தையால் தான் தனக்கு கஷ்டம் என ஜோதிடர் கூறியதால் தனது குழந்தையை கிணற்றில் வீசி கொன்றதாக ராஜமாணிக்கம் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 669. | 6.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கோட்டைப்பட்டியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன். தனக்கு சொந்தமான இடத்தில் தேக்குமரம் வளர்த்து வந்தார். அந்த மரத்தை தனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்த அனுமதிகேட்டு வனச்சரக அதிகாரி சுப்பிரமணியத்தை அணுகினார். அவர் ரூபாய் 4 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 670. | 6.3.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் வெங்கடேஸ்வராநகரைச் சேர்ந்த ராஜன் மனைவி சுமதி(26). மகள் ரம்யா(9). ரெங்காநல்லுரைச் சேர்ந்த முருகன்(32). குழந்தை ரம்யாவை கடத்தியதோடு தனது ஆசைக்கு இணங்கும்மாறு சுமதியை மிரட்டியதாக முருகன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 671. | 6.3.2010 | **மதுரை மாவட்டம்:** சிந்தாமணி ரோடு பகுதியைச் சேர்ந்த பாலசுந்தரம் மனைவி ஜெனித்தா. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதாக ஜெனித்தா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 672. | 6.3.2010 | **சேலம் மாவட்டம்:** தலைவாசல் அருகே உள்ள தேவியாகுறிச்சியை | குழந்தைத் திருமணம் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த அங்கமுத்து மனைவி கவிதா மகள் சுகன்யா(14). கவிதா தனது தம்பியான வெங்கடேசுக்கு (19) சிறுமியை சுகன்யாவை கட்டாய திருமணம் செய்து வைத்ததாக புகார். | | |
| 673. | 6.3.2010 | **கோவை மாவட்டம்:** கோவை மருதமலை சாலையிலுள்ள அரசு சட்டக்கல்லூரியில் முதலாம் அண்டு படிப்பவர் நவீன்குமார்(18). உடன் படிக்கும் சீனியர் மாணவர்கள் சமீஷா, பட்டன், சுந்தர், ரமேஷ், இவர்கள் மாணவர் நவீன்குமார் உட்பட 4 மாணவர்களை தாக்கியதாக புகார். | ராகிங் | தினகரன் |
| 674. | 6.3.2010 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி அருகேயுள்ள ஜக்கம்பட்டியைச் சேர்ந்த சென்றாயப்பெருமாள்(35). மனைவி ஆவுடையா ஆச்சி(28). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு மனைவி ஆவுடையாச்சி மீது மண்ணென்ணெய் ஊற்றி எரிக்க முயன்றதாக பெருமாள் மீது ஆவுடையாச்சி வாக்குமூலம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 675. | 6.3.2010 | **கடலூர் மாவட்டம்:** திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்தவர் பழனிவேல் மனைவி ஜெர்மனை சேர்ந்த மில்டன் தெர்க்கார். இவர்கள் தங்களது முன்று குழந்தைகளுடன் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு சுற்றுலா வந்தனர். அங்கு தீட்சிதர் மணிகண்டன் குழந்தை ஜெனனியை தலையில் அடித்ததாக பழனிவேல் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 676. | 6.3.2010 | **கோவை மாவட்டம்:** காரமடையில் தனியார் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குனர் நளினி. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 25 லட்சம் கடன் கேட்டு விண்ணப்பித்தார். வங்கியின் தலைமை மேலாளர் கல்யாண் ரூபாய் 50 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக நளினி புகார். | லஞ்சம் | தினமலர் |
| 677. | 6.3.2010 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியைச் சேர்ந்த வழக்குறிஞர் ஹரி, சிவகுருநாதனை திருச்சி காவல்நிலைய காவலர்களால் அடித்துத் தாக்கியுச் சித்திரவதை. | காவல் நிலைய வன்முறை | பிரபாகரன் |